காவல் தலைமை இயக்குநர் அவர்கள் / இணைப்பு நீதிபதி இராமநாதபுரம்
அவர்கள் மேலாக

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்றவியல் நடைமுறை விதி 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120304

1. District : இராமநாதபுரம் மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் | Year: ஆண்டு | FIR No.: 02/2025 மு.த.அ. எண் | Date: 22.01.2025 நாள்

2. (i) Act சட்டம்: PC Amendment Act 2018 — Sections பிரிவுகள்: 7(a) of P.C. Amendment Act 2018
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : 22.01.2025 நாள் வரை திங்கள் கிழமை 10:00 மணி
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : 22-01-2025 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : 13.40 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் ஏதுமில்லை-I | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிழக்கே 38 கி.மீ. தொலைவில்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி நகராட்சி அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. பாரதி கண்ணன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அரங்கநாதன்
(c) Date / Year of Birth : 26/2025 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : இந்தியன் நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : அரசு ஊழியர் தொழில் | (g) Address : முகவரி 2/93, மேலச்சத்திரம் தெரு, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பரமேஸ்வரன், டவுன் பிளானிங் ஆய்வாளர்
நகராட்சி அலுவலகம், பரமக்குடி,
பரமக்குடி,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் ஏதுமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : N.இராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 22.01.2025 ஆம் தேதி 13.15 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி பாரதிகண்ணன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் டவுன் பிளானிங் ஆபீசராக பணிபுரியும் திரு.பர்குணன் என்பவரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.02/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 22.01.2025ஆம் தேதி 13.40 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு அனுப்புநர் இ.பாரதிகண்ணன், வயது 26/2025 த/பெ இளங்கோவன், 2/98, மேலசத்திரம் தெரு, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம் அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பரமக்குடி நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு இ. பாரதிகண்ணன்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.01.2025 14.10 மணி.

Name: பெயர் N. இராஜேஸ்வரி
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ஊ.த.க.பி
இராமநாதபுரம்

<u>இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி</u>

ஆவேன். திரு.பாலகிருஷ்ணன் என்பவருடைய சர்வே எண்.151/2 ல் உள்ள நான்கு வீட்டு மனைகளை அளவீடு செய்து DTCP மற்றும் பரமக்குடி நகராட்சியில் உரிய பிளான் அப்ரூவல் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார். அவர் வெளிநாட்டில் இருப்பதால் இது தொடர்பாக அவரது உறவினர் திரு.ஜெயக்குமார் என்னிடம் தொடர்பில் இருந்தார். இந்நிலையில் DTCP அப்ரூவல் வாங்கிய பிறகு பரமக்குடி நகராட்சியிலிருந்து டவுன் பிளானிங் ஆபீசராக பணிபுரியும் திரு. பர்குணன் பீல்டு விசிட்டிற்கு வந்தார். பின்பு நகராட்சியில் பிளான் அப்ரூவல் வாங்க கட்டணமாக ரூ.77,000/-த்தை நகராட்சிக்கு கடந்த 09.01.2025ஆம் தேதி செலுத்தினோம். பின்னர் இது தொடர்பாக மேற்படி பிளாட்டுகளை பீல்டு விசிட் செய்த பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் டவுன் பிளானிங் ஆபீசராக பணிபுரியும் திரு. பர்குணன் என்பவரை மறுநாள் 10.01.2025 ஆம் தேதி அணுகி விபரம் கேட்ட போது ஒரு வீட்டு மனை பையிலுக்கு ரூ.5,000/- வீதம் 4 வீட்டு மனை பையிலுக்கு மொத்தம் ரூ.20,000/-த்தை எனக்கு தனியாக கொடுத்தால் தான் உங்களுடைய பைலை தயார் செய்து பரிந்துரை செய்வேன் எனக்கூறினார். அதற்கு ஏற்கனவே நகராட்சிக்கு கட்ட வேண்டிய பணம் ரூ.77,000/-த்தை கட்டியாச்சு மேலும் நான் இந்த தொழிலுக்கு புதுசு என்னிடம் வரும் கிளைன்ட். நான் மற்ற இன்ஜியனியர்களை விட குறைந்த பிராசசிங் சார்ஜ் கேட்பதால் மட்டுமே என்னிடம் வருகிறார்கள் இந்த சூழ்நிலையில் உங்களுக்கு என தனியாக கொடுத்தால் என்னால் தொழிலே நடத்த முடியாது எனவே தயவு செய்து எனது பைல் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டேன். அதற்கு அவர் எனக்கு மட்டுமில்லை மற்ற அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும் என சொன்னார். நான் அதற்கு ஒன்னும் சொல்லாமல் வந்து விட்டேன். அதன்பிறகு இன்று 22.01.2025 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் டவுன் பிளானிங் ஆபீசராக பணிபுரியும் திரு.பர்குணன் அவர்களை மீண்டும் ஒரு முறை நேரில் சந்தித்து மேற்படி பைல்கள் குறித்து கேட்ட போது அவர் ஏற்கனவே கூறியவாறே 4 வீட்டு

மனைக்கு அப்ரூவல் கொடுக்க பைலை பிராசஸ் செய்வதற்கு ரூ.20,000/-த்தை இன்றைக்கே கொடுத்தால் வேலையை தொடங்கி விடுவேன் இல்லையெனில் பைல் அப்படியே தான் கிடக்கும் என கராராக சொன்னார். நான் அதற்கு எதுவும் பேசாமல் வந்து விட்டேன். பின்னர் அங்கிருந்து வெளியில் வந்து அது பற்றி நான் யோசித்து பார்த்தபோது அரசு பணியை செய்ததற்கு லஞ்சமாக ரூ.20,000/- எதற்கு கொடுக்க வேண்டும் என யோசித்து பார்த்து அரசு பணியை செய்வதற்காக என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட பரமக்குடி நகராட்சியில் நகர திட்ட அலுவலராக பணிபுரியும் திரு.பர்குணன் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட பரமக்குடி நகராட்சியில் திட்ட அலுவலகராக பணிபுரியும் திரு.பர்குணன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) இ. பாரதிகண்ணன். Received the complaint on 22.01.2025 at 13.15 hrs and Enquired the Character and Antecedents of the complainant and Accused and registered a case in Ramnad V&AC Cr.No.02/2025 u/s 7(a) of P.C. Amendment Act 2018 at 13.40 hrs. (Sd) N.Rajeswari, Inspector of Police. V&AC, Ramanathapuram 22.01.2025. இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் தலைமைக்குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

NR 22.1.25

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.